Registered as a Newspaper in Ceylon ★ ★ விலை சதம் 10

# ஈழநாடு

THE EELA NADU

தேசிய தினசரி National Tamil Daily

மலர் 8 (12-5-66) இதழ் 94

பராபவ சித்திரை 29 ஹிஜ்ரை முஹர்ரம் 20 வியாழக்கிழமை

**901 மல் பீஸ் வேட்டி**
ரூ. 8-25க்கும்
மற்றும்
உங்களுக்குத் தேவையான
சகலவிதமான
**ஜவுளி வகைகளும்**
சகாய விலைகளில்
எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.
( கூப்பன் தேவையில்லை )
**கணேசானந்தாஸ்**
208, காங்கேசன்துறை வீதி,
( முட்டாசுக் கடைச் சந்திக்கருகாமையில் )
யாழ்ப்பாணம்.

மொழிபற்றிய

## வாக்குறுதிகள் காப்பாற்றப்படும்

புதுடில்லி. மே. 11

மொழிக்கொள்கை சம்பந்தமாக நேருஜியும் சாஸ்திரியும் சிறுபான்மை மக்களுக்கு முன்னர் அளித்த வாக்குறுதிகளை இந்திய அரசாங்கம் தொடர்ந்து கடைப்பிடிக்குமென்றும், அந்த வாக்குறு

(6-ம் பக்கம் பார்க்க)

குறைக்கப்பட்ட

# பென்ஷன் மீண்டும் கிடைப்பது சாத்தியம்

## ஏப்ரல் வருமானம் ரூ. 8,34,496

### யாழ். இ. போ. ச. கிளை சாதனை

யாழ்ப்பாணம், வியா.

இலங்கை போக்குவரத்து சபையில் யாழ்ப்பாண பிராந்தியக்கிளை கடந்த ஏப்ரல் மாதத்தில் ரூபா 8,34,496 வருமானம் பெற்றிருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இதுபோன்ற வருமானம் முன் எந்தமாதத்திலாவது கிடைத்ததில்லை என்று கூறப்படுகிறது.

இக்கணக்கின்பிரகாரம் ஒரு மைல் ஓடுவதில் நூற்று நாலரைச் சதம் வருமானமாகக்கிடைக்கிறது. இதுமார்ச் மாதத்தைவிட 10 சதம் அதிகமானதென்றும்சென்ற வருடம் ஏப்ரல் மாதத்தை விட 15 சதம் அதிகமானதென்றும் யாழ்ப்பாண பிராந்திய மனேஜர் தெரிவித்துள்ளார்.

இவ்வளவு பெரிய சாதனையை தாங்கள் நிறைவேற்றியது இதுவே முதல் தடவையென்றும், பஸ்களின் நிலைமை திருப்திகரமாயில்லாவிட்டாலும் சாரதி, கொண்டக்டர், மெக்கானிக் என்ஜினியர் முதலிய இ. போ. ச. சிப்பந்திகளின் திறமையான உழைப்பே இதற்குக்காரணமென்றும் அவர் சுட்டிக்காட்டுகிறார்.

இம்மாதத்து வருமானத்தின் குறிக்கோள் ரூபா 9,20,244ஆக வைக்கப்பட்டிருக்கிறது.

### 8 இரட்டைத்தட்டு பஸ்கள்

தேசிய சேவைகள் உதவி மந்திரி திரு. வெலகெதரையும், இ. போ. ச. தலைவரும் யாழ்ப்பாணத்துக்கு அனுப்புவதாக வாக்களித்துள்ள 20 புதிய பஸ் வண்டிகளில் 8 இரட்டைத்தட்டு பஸ் வண்டிகளும் சேர்க்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

## மலேஸியாவிலிருந்து திரும்பிய அமிர்தலிங்கம் நம்பிக்கை

### அரசாங்கரீதியில் நடவடிக்கைமேற்கொள்ள யோசனை

யாழ்ப்பாணம், வியாழன்

மலேஸியாவில் சேவைபுரிந்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அரசாங்க சேவையாளர்களின் விதவைகளுக்கும், அனாதைகளுக்கும் சமீபத்தில் குறைக்கப்பட்ட பென்ஷன் மீண்டும் பழையபடி கிடைக்கக்கூடிய சாத்தியக்கூறுகள் ஏற்படலாமெனத் தெரியவருகிறது.

கோலாலம்பூரில் நடைபெற்ற சர்வதேச தமிழாராய்ச்சி மகாநாட்டுக்குச் சென்றிருந்த வட்டுக்கோட்டை எம். பி. திரு. அ. அமிர்தலிங்கம் இவ்விஷயமாகமலேஸியாவின் முக்கிய மந்திரிகளுடன் தொடர்பு கொண்டு இவ்விஷயத்தைக் கருணையோடும் அனுதாபத்தோடும் ஆராய்ந்து இங்குள்ள பென்ஷன்காரர்கள் முன்னர் பெற்றுவந்த பென்ஷன் கிடைக்க வழிமேற்கொள்ளுமாறு கேட்டிருந்தார் கோலாலம்பூரிலுள்ள இலங்கை தூதராலயம் இவ்விஷயமாக உத்தியோக ரீதியில் தங்களுக்கு அறிவித்தால் தாம் இதுபற்றி ஆராய்ந்து ஆவன செய்யமுடியுமென எம். பி. யிடம் கூறப்பட்டது. திரு. அமிர்தலிங்கம் மலேசியாவிலுள்ள இலங்கை தூதுவராலயத்துடன் இதுபற்றி தொடர்பு கொண்டபோது இலங்கை திறைசேரிதமக்குஇன்னமும் இதுபற்றிய விபரம் தெரிவிக்கவில்லை எனவும் திறைசேரியிலிருந்து விபரம் கிடைத்ததும் ஆவனநடவடிக்கை மேற்கொள்ளப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டதாக அறியப்படுகிறது.

இது விஷயத்தில் சில மலேஸிய மந்திரிகள் அக்கறை காட்டியதாக திரு. அமிர்தலிங்கம் தெரிவித்தார். (நநி)

## சீன அணுகுண்டு அதிகசக்தி வாய்ந்தது!

### ஜப்பானில் கதிரியக்க துகள்கள்

டோக்கியோ, மே 11

சீனு வெடித்தது அணுகுண்டா அல்லது ஜலவாயுக் குண்டா என்பது பற்றி இன்னும் அறிகுறி தென்படவில்லையென்றும், ஆனால் சென்ற தடவை வெடித்ததைவிட இது இருமடங்கு அதிகவலிமை பொருந்தியது என்றும் அறிவிக்கப்படுகிறது.

அதே சமயம் கடந்த 48 மணி நேரத்தில் மேற்குஜப்பானிய கடற்கரைப்பகுதிகளில் கதிரியக்க துகள்கள் காணப்பட்டிருக்கின்றன.

பாதிக்கப்பட்டிருக்கும் 9 முயல்களும், 15 எலிகளும் சோதனைக்கு உள்ளாக்கப்படவிருக்கின்றன.

எதுவாகிலும் சீனு வெடித்த குண்டு மனிதர்களுக்கும், உணவுப்பொருட்களுக்கும் தீமையை விளைவிக்குமெனக்கருதப்படுகிறது.

அமெரிக்காவுக்கு கிடைத்த தகவலின்படி, சீனக் குண்டு முன்னைய சோதனைக் குண்டுகளைவிட மிகவும் சக்தி வாய்ந்தது எனத் தெரியவருகிறது.

நேபாளம், இந்த வெடிப்பு குறித்து அதிருப்திதெரிவித்திருக்கிறது.

சீனுவின் அணுகுண்டுவெடிப்பு இந்தியாவின் எல்லைப் பாதுகாப்பு பற்றிய அணுசக்தி கொள்கையின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறது என பிரதம மந்திரி ஸ்ரீமதி காந்தி இன்று கூறினர்.

அணுகுண்டு நாடுகள் சீனுவின் அணு ஆயுதத்திற்கெதிராக அணு ஆயுதமற்ற நாடுகளுக்கு பாதுகாப்பு உத்தரவாதம் அளிக்க வேண்டுமென்றும், அணுநுட்பத்துறையில் இந்தியா மேலும் தனது அறிவை வளர்க்கவேண்டும் என்றும் வெளிமந்திரி சுவர்ணசிங் கூறினர்.

## காரைநகர் குடிநீர்ப் பிரச்னை: மந்திரிக்கு மகஜர்

சுழிபுரம், புதன்

''வட்டுக்கோட்டைத் தொகுதியிலிருக்கும் தொல்புரம் கிராமத்திலுள்ள புன்னலை பெரியகுளத்தை அபிவிருத்தி செய்து இக்குளத்தின் ஆழத்தை அதிகரித்து குளத்தை விஸ்தரிப்பதன்மூலம் காரைநகர்ப் பகுதி மக்களின் குடிநீர்ப் பிரச்னையைத் தீர்த்துவைக்க முடியும்'' என்று உள்ளூராட்சி அமைச்சர் செனட்டர் எம். திருச்செல்வத்துக்கு வலிமேற்கு, வடக்கு விவசாய கமிட்டி யூனியன் சமர்ப்பித்துள்ள மகஜரொன்றில் நம்பிக்கை தெரிவித்துள்ளது.

இதுசம்பந்தமாக யூனியன் தலைவரும் ஓய்வுபெற்றநீர்ப்பாசன என்ஜினியருமான திரு. ஏ. தையல் பாகர் சமர்ப்பித்துள்ள மகஜரில் மேலும் தெரிவித்திருப்பதாவது:

காரைநகருக்கான உத்தேச நீர்வினியோகத் திட்டம் சம்பந்தமாக எடுக்கப்படும் நடவடிக்கைகளைத் துரிதமாக்குவது மிகவும் அவசியமாகும். காரைநகர்ப் பகுதி மக்களின் குடிதண்ணீர்ப் பிரச்னை உடன் தீர்த்துவைக்கப்பட வேண்டும், இதற்கு எடுக்கப்படும் முயற்சிகள் வட்டுக்கோட்டைத் தொகுதியிலுள்ள சகல மக்களுக்கும் பயன்படவேண்டுமென்பது எமது கோரிக்கையாகும்.

ஜூலை, ஆகஸ்ட், செப்டம்பர் மாத காலங்களில் புன்னலைப் பெரிய குளத்தில் நீர் வற்றிவிடுகிறது. ஆனால் குளத்தின் வெகு அண்மையிலுள்ள கிணறுகளில் நீர் வற்றுவதில்லை. புன்னலைப் பெரியகுளத்தை போதுமான அளவு ஆழமாக்கி அதனை விஸ்தரிப்பதன்மூலம் இக்குளத்து நீரை வற்றவிடாமல் செய்யமுடியும். இவ்விஷயத்தில் கூடிய கவனம் செலுத்தினல் நல்ல பயன் கிடைக்கும்.

### நேரு நினைவு விழா

பருத்தித்துறை, செவ்.

கரணவாய் தெற்கு கலாபடிப்பக மன்றம் நடத்தவிருக்கும் நேரு நினைவு தின விழாவில் விளையாட்டுப் போட்டிகளுடன் பல கலை நிகழ்ச்சிகளும் நடத்த ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

### உரக்கூட்டுத் தாபனம்

கொழும்பு, புதன்

உரக்கூட்டுத் தாபனத்தை நடத்துவதற்காக 5 பேர் கொண்டகமிட்டியொன்றை விவசாய அமைச்சு நியமித்திருக்கிறது.

### இந்தி கிளர்ச்சி வழக்கு

எதிரிகள் விடுதலை

புதுடில்லி, மே. 11

இந்திக் கிளர்ச்சி இயக்கங்களின்போது பொலிஸ் ஜவான்கள் சிலர் கொலை செய்யப்பட்டது சம்பந்தமாகக் கைதுசெய்யப்பட்ட தி. மு. க. உறுப்பினர் திரு. ராஜாராம் உட்பட மற்றும் 57 பேர் இன்று விடுதலை செய்யப்பட்டார்கள். இவர்களை விடுதலைசெய்து தீர்ப்பளித்த நீதிபதி, அவர்கள் மீதான குற்றச்சாட்டு [illegible]

யாழ்ப்பாணம்:

## ஆஸ்பத்திரிகளில் திடீர் சோதனை

யாழ்ப்பாணம், வியா

அண்மையில் சங்கானை பொலிசாரினல் அப்போதிக்கரி ஒருவரின் வீடொன்றில் கைப்பற்றப்பட்ட மருந்து வகைகளைத் தொடர்ந்து யாழ்ப்பாண அரசினர் ஆஸ்பத்திரியிலும் மற்றும் யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள சகல அரசினர் ஆஸ்பத்திரிகளிலும் மருந்து வகைகள் சம்பந்தமான திடீர் பரிசோதனைகள் நடைபெற்று வருவதாகத் தெரியவருகிறது.

யாழ்ப்பாண சுகாதாரப் பகுதியைச் சேர்ந்தஊழியர்களினல் தற்பொழுது இப்பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சங்கானையிலுள்ள அப்போதிக்கரி வீட்டில் பொலிசாரினல் கைப்பற்றப்பட்ட மருந்து வகைகளின் பெறுமதி லட்சம் ரூபா என்பது பொதுமக்களுக்கு நினைவிருக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

ஒவ்வொருவரும் தங்கள் நித்யகர்மானுஷ்டானங்களைத் தவறாமல் செய்யவேண்டும். அப்படிச் செய்வதால் உள்ளம் உறுதியாகி, வாழ்க்கையிலே எந்தச் சோதனைகளையும் வெற்றிகரமாகச் சமாளிக்கவும் இறை அருள் கிடைக்கப்பெறவும் முடியும். —ஸ்ரீமத் இலக்கணசுவாமிகள்.


# ஈழநாடு

.. NADU; National Tamil Daily Post ...
Telegrams: EELA NADU Jaffna. Phone: 38

... பராபவ ஆண்டு சித்திரை மீ 29 உ (12-5-66)


## மூன்ருவது சீன வெடி

புது சீனம் வெடித்த மூன்ருவது அணுகுண்டைப்பற்றி ஐக்கிய நாடுகள் ஸ்தாபனக் காரியதரிசியும், ஜப்பான், அமெரிக்கா, இந்தியா முதலிய நாடுகளும் கண்டித்துள்ளன. வடகொரியா, வட வியட்நும், அல்பேனியா இவை பாராட்டியுள்ளன. ஆனல் இலங்கை அரசாங்கம் இதை நாம் எழுதும்வரை எவ்வித அபிப்பிராயமும் தெரிவித்ததாகத் தெரியவில்லை.

அணுகுண்டுகளை வெடிப்பதால், மக்களின் சுகாதாரத்துக்கு ஆபத்து ஏற்படுகிறதென்பதைப் புதுசீனமும் மறுக்கவில்லை. ஆனல் அமெரிக்காவும் ரஷ்யாவும் அணுகுண்டு முன்தீபை ஏகபோகமாகச் செய்கையில், புதுசீனம் மட்டும் அதைப் பார்த்துக்கொண்டு சும்மா இருக்கமுடியாதென்றும், அணுகுண்டு ஆபத்து இல்லாமற் செய்வதற்கே தாங்கள் இதில் ஈடுபட்டுள்ளதாகவும் புதுசீனப் பிரதமர் இதுபற்றி சமாதானம் கூறுகின்ருர். ஐ. நா. ஸ்தாபனத்திலே இன்னும் சேர்த்துக்கொள்ளப்படாத நிலையிலே புதுசீனத்தை இவ்விஷயமாக அடக்கவோ கேள்வி கேட்கவோ முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

ஏற்கெனவே இரு குண்டுகளை புதுசீனம் வெடித்தபோதும் பல கண்டனங்கள் கிளம்பின. என்ருலும் பீகிங் அதை இலட்சியம் செய்யவில்லை. அணுகுண்டு செய்வதில் அதிக திறமை பெற்றுள்ளதாகவும் முன் இரு குண்டுகளை விட மூன்ருவது சீன வெடி அதிக சக்தி வாய்ந்ததென்றும் சொல்லப்படுகின்றது. இதைப் பின்பற்றி புதுசீனம் அதிக அணுகுண்டுகளையும், ஜலவாயுக்குண்டுகளையும் செய்துவெடிப்பதாயின் அதில் வியப்பில்லை. இவ்விதம் அணுகுண்டுகள் போட்டாபோட்டியுடன் செய்யப்பட்டு வெடிக்கப்படுவதால் உலக மக்களின் சுகாதாரத்துக்கு ஆபத்து ஏற்படுவது ஒருபுறமிருக்க, மக்களின் நன்மைக்காகப் பயன்படவேண்டிய பணம் ஏராளமாக நாசகார பயங்கர ஆயுதங்களுக்கு வீணுக்கவும் படுகின்றது.

புதுசீனம் அணுகுண்டுகளைச் செய்வதால் தங்களுக்கு ஆபத்து அதிகரித்துள்ளதாயும், ஆகவே இந்தியா, தற்பாதுகாப்புக்காக அணுகுண்டுகளைச் செய்ய வேண்டுமென்றும் கருத்து பலப்பட்டு வருவதாகச் சொல்லப்படுகின்றது. இது எதிர்பார்க்கக்கூடியதே. ஆனல் புதுசீனம் உள்ளிட்டு சில வல்லரசுகள் செய்யும்தவறை இந்தியாவும் செய்வதாயின் அது எவ்விதத்திலும் நல்லதாகாது அணுசக்தியை ஆக்க வேலைகளுக்காகப் பயன்படுத்திவரும் இந்தியா, மற்ற உலக நாடுகளுக்கு வழிகாட்டியாக இருந்து அவற்றைத் திருத்த முயலுவதே சிறந்தது.

அணுகுண்டு யுத்த ஆபத்து அதிகரித்துள்ள இச்சமயத்தில் இதிலிருந்து உலகத்தைக் காக்க என்ன வழி என்பது முக்கிய கேள்வி. மூன்ருவது குண்டையும் வெற்றிகரமாக புதுசினம் வெடித்ததிலிருந்து அதன் ஆயுத சக்தி பெருகியுள்ளதென்பதும் கண்கூடு. இந்த ஆயுதப் போட்டி வளர்ந்து கொண்டே போனல், உலகத்துக்கும் சிறப்பாக ஆசிய நாட்டு மக்களுக்கும் ஆபத்து அதிகமாகும். முதல் அணுகுண்டு ஆசியமண்ணில் தான் வெடித்து பெரும் நாசம் விளைவித்தது. இனியும் அவ்வித ஆபத்து ஏற்படாமல் தடுக்க எல்லா முயற்சிகளையும் செய்ய வேண்டும். இதற்குவழி புதுசீனத்தை இனி தவக்கம் எதுவுமின்றி ஐ. நா. ஸ்தாபனத்தில் சேர்த்துக் கொள்வதுடன் அணுகுண்டுகளை எல்லாம் பொதுவான ஐ. நா. ஸ்தாபனத்திடம் ஒப்புவிப்பதுதான். இது இன்றைய நிலையில் முடியக்கூடியதல்லவென்றே தோன்றும். ஆனலும்இப்படியான தீவிர ஏற்பாட்டைச் செய்யாமல் புதுசீனத்தை இதேபோக்கில் விட்டுவைப்பதாயின் அது உலகசமாதானத்துக்கும் சிறப்பாக ஆசிய மக்களின் நன்மைக்கும் உகந்ததாகாது.

### கே. எம். பி. நடவடிக்கை

கொழும்பு, புதன்

மீன்பிடி கூட்டு ஸ்தாபனத்தை சீர்திருத்தம் செய்வதில் அதன் புதிய தலைவர் திரு. கே. எம். பி. ராஜரத்தின ஈடுபட்டுள்ளார்.

பல உத்தியோகத்தர்களுடன் கலந்து நடாத்திய ஒரு மகாநாட்டின் பின்னரே திரு. ராஜரத்தின இவ் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார்.

### சரணடைந்தார்

எல்பிட்டியா, புதன்

கெக்கிறஸ்கண்ட கொலை வழக்கில் பொலிசாரினல் தேடப்படும் ஐ. டி. சைஷன் என்பவர் பலப்பிட்டியா மாஜிஸ்டிரேட் திரு. எம். பி. ஜி. திஸநாயக்கா முன்னிலையில் சரணடைந்தார். இப்பொழுது இவர் பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளார்.

### கட்டணம் பத்து ரூபா

கொழும்பு புதன்

மே மாதத்திற்குப் பின் புதுப்பிக்கப்படும் ரேடியோ லைசென்ஸ் கட்டணம் பதினைந்து ரூபாவிற்குப் பதிலாக பத்து ரூபாவாக குறைக்கப்பட்டுள்ளது.

இன்று குருபூசைத்தினம்

## ஈழம் தந்த இலக்கண முனிவர்

— வித்துவான் பொன். முத்துக்குமாரன் —

[இலக்கண முனிவர் ஸ்ரீமத் முத்துக்குமாரத் தம்பிரான் சுவாமிகளின் குருபூசை தினத்தை யொட்டி இக்கட்டுரை இங்கு வெளியிடப்படுகிறது.]



சிரசிலும் கழுத்திலும் உருத்திராக்க மாலையும், நெற்றி முதலிய அங்கங்களில் திருநீற்றுப்பொலிவும் இடையில் காவிஉடையும், நாவில் ஸ்ரீபஞ்சாக்கரமும், நெஞ்சில்சிதம்பர நடராசப் பெருமானின் நினைவும் உடைய முனிவர் ஒருவர் இற்றைக்குச் சில ஆண்டுகளுக்குமுன் தில்லை வீதியிலே உலாவியதை, சிதம்பரத்தில் வாழ்ந்தவர் எல்லோரும் அறிந்திருப்பார்கள். வீதியிலே அவர் செல்லும் போது, பல்கலைக்கழகப் பேராசிரியராயினும், கல்வியறிவில்லாத சாதாரண மக்களாயினும், சிவபக்தி நிரம்பிய செல்வர்களாயினும், தெய்வ நம்பிக்கையே இல்லாதவர்களாயினும் அவரை எதிரே கண்டால் அன்பும் அடக்கமும் தம்மையறியாமலே மனத்தில் பொங்க, ஒடுங்கி ஒதுங்கி ஒருபுறமாய் நின்று அஞ்சலி செய்வர். அவ்விதம்யாவரும் தொழத்தக்கவாறு சிறப்பு வாய்ந்த மதிப்புப் பெற்று வாழ்ந்தவர் இலக்கணச் சுவாமிகள் என்னும் ஸ்ரீமத் முத்துக்குமாரத் தம்பிரான் சுவாமிகளேயாவர்.

### ஞானபரம்பரை

தமிழகத்திலிருந்து காலந்தோறும் பலப்பல தவச் செல்வர்களும் பண்டிதர்களும் ஈழநாட்டிற்கு வந்து சிவநெறியையும் செந்தமிழறிவையும் பரப்பியுள்ளனர். அவ்வாறே ஈழநாட்டிலிருந்தும் காலந்தோறும் சிவ ஞானிகளும் செந்தமிழ்ப் புலவர்களும் தமிழகத்திற்குச் சென்று சைவமும் தமிழும் தழைக்க உழைத்து உயர்ந்த புகழ்பெற்றுள்ளனர். இலக்கணச் சுவாமிகளும் ஈழமளித்த அத்தகைய ஞானபரம்பரையினரே.

இலக்கணச் சுவாமிகள் இளம் பருவத்திலேயே தமிழகத்தையடைந்து கல்வி கேள்வி மிக எய்தப்பெற்று, துறவியாகிச் சைவமும் தமிழும் உய்யத் தவஞ்செய்த தனிப்பெருமுனிவராவர். அவர்செந்தமிழிலும் வடமொழியிலும் கல்லாத இலக்கண இலக்கியங்கள் இல்லை. அத்துடன் சைவ சாத்திரங்களையும் கரைகண்டவர்.

பழமரங்களைத் தேடிப் பறவைகள் செல்வதுபோல ஞானமும் கல்வியும் நல்லொழுக்கமும் நனிகைவரப் பெற்ற சுவாமிகள் இருக்குமிடத்தை நாடி தமிழ்ப் புலமையில் தாகமுடையாரும், வடமொழியறிவில் மனம் பறிகொடுத்தோரும், சைவ சாத்திரத்தேர்ச்சியில் தணியாதவேட்கையுற்ருேரும் நல்லுபதேசமாத்திரைக்கே நாடியலைந்தோருமாகிய எல்லோரும் எப்போதும் செல்வாராயினர்.

(5-ம் பக்கம் பார்க்க)

ஃ ஃ ஃ

### சிதம்பரத்தில்

யாழ்ப்பாணம், வியா

இலக்கண முனிவர் ஸ்ரீ முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகளின் குருபூஜை இன்று சிதம்பரத்தில் சிறப்பாகநடைபெறும். ஈழத்தில் யாழ்ப்பாணத்திலும் குரு பூஜைத்தினத்தைக்கொண்டாட ஒழுங்குகள்செய்யப்பட்டுள்ளன.

## நாட்டிலும் நகரிலும்

கடந்த ஏப்ரல் மாதத்தில் இலங்கைச் போக்குவரத்து சபையின் யாழ்ப்பாணப் பிராந்தியக் கிளை இதற்கு முன் வேறெந்த மாதத்திலும் பெருத தொகையான வருமானத்தை ஈட்டிக் கொடுத்திருக்கிறதாம். இ. போ. ச. யாழ்ப்பாணத்துக்கு அனுப்பும் பஸ் வண்டிகளைப் பற்றி பிரமாதமாக புகழ்வதற்கு ஒன்றுமில்லை. இங்கிலாந்தில் ஏற்கனவே பாவிக்கப்பட்ட பஸ் வண்டிகளே இலங்கைக்கு அனுப்பப்படுகின்றன. பிறகு கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வரும் வண்டிகள் அரை உயிரில்தான் வந்து சேருகின்றன. யாழ்ப்பாணத்தில் பஸ் பிரயாணம் செய்பவர்கள் இதற்குச் சான்று பகர்வார்கள். பஸ் வண்டிகள் ஓடிக்கொண்டே போகும்பொழுது இடையில் 'மக்கர்' செய்வது இங்கு சர்வசாதாரணமாய்ப்போய் விட்டது. மழைகாலத்தில் ஒழுகும் பஸ், 'ஸீட்' இல்லாத பஸ், கண்ணுடி ஜன்னல்கள் இல்லாத பஸ் என்று பற்பல அங்கக் குறைவான பஸ் வண்டிகளை இங்கு காணலாம்.

இப்படியான [illegible] [illegible] கொண்டு நல்ல வருமானம் உழைப்பதென்ருல் அது பெருமைப்படத்தக்கதே.

ஆனல் இந்த இடத்தில் பஸ் பிரயாணிகளாகிய பொதுமக்களின் நிலை என்னவென்பதையும் ஆராய வேண்டும். இ. போ. ச. வுக்கு வருமானம் தேடிக் கொடுப்பது ஒன்று. பொதுமக்களைத் திருப்திப்படுத்துவது வேருென்று. நேரத்துக்கு வராத பஸ், வழியில் முடங்கும் பஸ், மூச்சு விட முடியாதபடி ஜனங்களை அடுக்குதல். மத்திய பஸ் நிலையத்திலேயே ஜனங்கள் நிற்பதற்கு நல்ல வசதிகள் இல்லாமை, இதுகளையிட்டு இன்றும் பொதுமக்கள் ஆத்திரப்படுகிருர்கள்.

தமக்கு உழைப்புத் தரும் பொதுமக்களை இ. போ. ச. ஊழியர்கள் மரியாதையாக நடத்த வேண்டியதும் இன்னென்று. நேற்று முன்தினம் நடந்த சம்பவம் ஒன்று. மத்தியானம் ஒருவர் யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்துக்கு வந்து அங்குள்ள இ. போ. ச. அதிகாரியிடம் திருக்கோணமலை பஸ் புறப்படும் நேரத்தைக் கேட்டாராம். இதிலிருந்து ஏதோ சிறிய வாக்குவாதம் ஏற்பட்டபோது இ. போ. ச. சிப்பந்திகள் பலர் ஒன்று

(5-ம் பக்கம் பார்க்க)

# ஐயாறன் எழுதுகிறது

ஈழத்தின் விலை மதிக்க முடியாத பொக்கிஷம் ஒன்று சிதம்பரத்தில் உள்ளது. என்ன தெரியுமா? சைவ உலகம் போற்றும் இலக்கணச்சுவாமிகள் எனும் ஸ்ரீமத் முத்துக்குமாரத்தம்பிரான் அவர்களின் புனித சமாதிதான் அது.

இன்று அப்பெரியாரின் குருபூசை. சென்ற ஆண்டிலே குருபூசையின்போது சிதம்பரத்தில் இருந்தேன். பூசைக்கு நாலைந்துபேரே வந்திருந்தனர். வெயில் மழைக்குப் பாதுகாப்பற்றிருந்தது சமாதி. ஈழத்துத் தமிழ்ப் பெரியாரின் இவ்வித புனித சமாதி அங்கிருப்பதும், குருபூசை நடப்பதுங்கூட, அண்ணுமலையில் படிக்கும் நம் ஈழத்து மாணவ மாணவிகளுக்குத் தெரியாதென்பதை அறிய மிக ஏமாற்றமாக இருந்தது.

ஃ ஃ ஃ

யாழ்ப்பாணத்திலும் கூட இந்தச் சமாச்சாரம் எவ்வளவு பேருக்குத் தெரியுமோ? இப்போது இங்கிருந்து சைவமக்கள் சிதம்பரம் செல்ல மீண்டும் சிறிது வசதி ஏற்பட்டுள்ளது. அடுத்த முறை நீங்கள் செல்லுகையில், கட்டாயம் இந்தப் புனித சமாதிக்குச் சென்று அஞ்சலி செலுத்த வேண்டுகிறேன். ஈழத்து மகான்களை, ஈழத்து மக்கள் போற்றிக் கௌரவிக்க வேண்டாமா? அப்படிக் கௌரவிப்பதில்தான், ஈழத்தின் பெருமையும் மதிப்பும் உயருவதாக இருக்கும். மேலைநாடுகளிலோ, வேறு சமூகத்திலோ இவ்வித மகானின் சமாதி இருந்தால், அதை எவ்வளவு சிறந்த முறையில் வைத்துப் போற்றி ஆராதிப்பர்! இங்குள்ள சைவப் பெருமக்களும், ஸ்தாபனங்களும் இச்சமாதிபற்றிப் புதிய அக்கறை எடுக்க வேண்டுமென்றே இதை இங்கு எழுதலானேன்.

ஃ ஃ ஃ

14 வயதிலே ஈழத்தை விட்டுத் தமிழகம் சென்று தவவாழ்வு வாழ்ந்து தமிழுக்கும் சைவத்துக்கும் அருந்தொண்டாற்றிய அம்மகானின் தூய வாழ்க்கை, சைவநாயன்மாரின் வாழ்க்கையை நினைவுபடுத்துவதாகவுள்ளது சைவத்திலே 63 நாயன்மாரென்று வரையறுத்துவிட்டதாகச் சிலர் கருதலாம். ஆனல் பத்தராய்ப் பணிவார்கள் அப்பாலும் அடிசார்ந்தார், சித்தத்தை சிவன் பாலே வைத்தார் முதலிய தொகையடியார்களையும் சேர்த்துள்ளதால் நாயன்மார்களின் எண்ணிக்கை வரையறுக்கப்படவில்லை என்பதும் அது வளர்ந்துவர இடமளிக்கப்பட்டுள்ளதென்பதும் தெளிவு. ஆகவே சைவ முறைப்படி லட்சிய வாழ்வு வாழ்ந்து கடைசிவரை தொண்டாற்றிய இப்புனிதரை திருத்தொண்டர் தொகையிலே தொகையடியார் குழாமில் சேர்த்துப் போற்றி வணங்குவது பல்லாற்ருலும் பொருந்துமல்லவா?

ஃ ஃ ஃ

பல சோதனைகளையும் வெற்றிகரமாகச் சமாளித்து யாழ்ப்பாணத்திலே இன்று ஒரு தினசரிப்பத்திரியாக 'ஈழநாடு' புகழுடன் நடப்பதாயின் அதன் ரகசியமென்ன தெரியுமா? இப்பெரியாரின் தவவலிமையும் ஆசியும்தான். அப்பெரியாரின் பெயரைச்சொல்லி, அவரது குடும்பத்தார்களால் எட்டு வருடங்களுக்குமுன்

(5ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "வருந்தத்தக்கது": சீன அணுகுண்டு வெடிப்பு பற்றி யுதாண்ட்

## கதிரியக்கம் பற்றி ஜப்பானில் ஒரு வாரம் ஆராய்ச்சி

### காற்று மண்டல அணு சோதனைக்கு ரஷ்யா பலத்த எதிர்ப்பு

நியுயோர்க், மே 11

'வருந்தத்தக்கது. ஐ. நா. கருத்தின்படியும், மனித சமுதாயத்தின் கருத்துப்படியும் இந்த நடவடிக்கை விரும்பத்தகாத ஒன்று' என சீனவின் புதிய அணுகுண்டு வெடிப்புக் குறித்து யுதாண்ட் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருக்கிறர்.

ஜப்பானில் காய்கறிகள், மீன்கள், இதர உணவுப் பொருட்கள் ஆகியன இந்த அணு வெடிப்பினுல் எவ்விதம் பாதிக்கப்பட்டிருக்கிறது என ஆராயுமாறு பிரதமர் ஸாட்டோ உத்தரவிட்டிருக்கிறர்.

வட ஜப்பானில் சீன அணுகுண்டினுல் ஏற்பட்டிருக்கும் கதிரியக்கம் பற்றி ஆராயப்படுகிறது. ஜப்பானிய விமானங்கள் ஒரு வாரம் இதுசம்பந்தமான நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கும்

சீனக்குண்டு வெடிப்பு அபாயகரமானது என ஜப்பானிய அரசாங்கம் கூறியிருக்கிறது.

இதற்கிடையில் சீன அணு வெடிப்பின் விளைவுகளை ஆராயுமாறு ஜெனிவா ஆயுதப் பரிகரண மகாநாட்டின் இறுதிக் கூட்டத்தில் இந்தியப் பிரதிநிதி வி. ஸி. திரிவேதி கேட்டுக்கொண்டார்.

இந்த வெடிப்பின் மூலம் சீனவின் பிரதேச விஸ்தரிப்பும், ராணுவ வெறிக்கொள்கையும் அம்பலமாகிவிட்டதென அவர் கூறினர்.

ரஷ்யாவும் எதிர்ப்புத் தெரிவித்திருக்கிறது. காற்று மண்டலத்தில் அணுசோதனை நடத்தப்படுவதை ரஷ்யா எதிர்க்கிறதென ரஷ்ய வெளிநாட்டமைச்சு அதிகாரி ஒருவர் கூறினர்.

வேறு பல உலக நாடுகளும் இக்குண்டு வெடிப்பை வன்மையாகக் கண்டித்திருக்கின்றன.

வரவேற்கும் நாடுகள்:

## "ரஷ்ய-அமெரிக்க ஏகபோகத்தை முறியடிப்பதே சீனக்கொள்கை"

### குண்டு வெடிப்புக்கு சூ சமாதானம்

பீகிங், மே 11

சீனவின் அணுகுண்டு வெடிப்பை வட வியட்னும், வட கொரியா, அல்பேனியா ஆகிய நாடுகள் வரவேற்றிருக்கின்றன. சீனவின் அணு ஆயுத பலம் குறித்து பாகிஸ்தானில் திருப்தி ஏற்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

அல்பேனிய பிரதமருக்கு நேற்று பீகிங்கில் அளிக்கப்பட்ட விருந்தில் பிரதமர் சூ-என்-லாய் பேசியபோது, ரஷ்யாவும், அமெரிக்காவும் அணுகுண்டு விஷயத்தில் கொண்டுள்ள ஏகபோக உரிமையை முறியடிப்பதே சீனவின் கொள்கை எனக் கூறினுர்.

அதே சமயம், மற்றநாடுகளைப் பயமுறுத்த சீன அணுகுண்டுகளை உபயோகிக்காது என்றும், தனது சொந்தப் பாதுகாப்புக்காகவே அது அணுகுண்டு வெடித்தது என்றும் சூ கூறினுர்.

சீனவின்இறுதிக்கொள்கை அணு ஆயுத ஒழிப்புத்தான் என்றும் அவர் கூறினர்.

சீனவின் பாதுகாப்புக்கும் உலக சமாதானத்திற்கும் அணுகுண்டு முக்கியமென்றும், அமெரிக்காவும், ரஷ்யாவும்தான் ஏராளமான குண்டுகளை வைத்துக்கொண்டு உலகைப் பயமுறுத்தி வருகின்றன என்றும் சூ-என்-லாய்குறிப்பிட்டார்.

சீனவை அமெரிக்கா தாக்கினுல், அதன்பின்போருக்கு ஒரு எல்லையே இருக்காது என்றும் சீனப் பிரதமர் எச்சரித்தார்.

இத்தக் கூட்டத்தில் அல்பேனிய பிரதமர் ரஷ்யாவைத் தாக்கிப் பேசியதை அடுத்து, பல்கேரியா, செக்கோஸ்லோவேகியா, கிழக்கு ஜெர்மனி, ஹங்கேரி, வெளி மங்கோலியா, போலந்து ஆகிய 9 கம்யூனிஸ்ட் நாட்டுப் பிரதிநிதிகள் வெளியேறினர்.

சீன அணுகுண்டு வெடிப்பைத் தொடர்ந்து இந்தியா தனது அணு ஆயுதக்கொள்கைபற்றி புனராலோசனை செய்யவேண்டுமெனப் பல இந்திய எம். பி.க்கள் வற்புறுத்தியிருக்கிறர்கள்.

## வத்திக்கானில் விசேஷ பிரார்த்தனை

வத்திக்கான், மே 11

3000-க்கு அதிகமான பொலிஷ்வாசிகள் வத்திக்கானில் நடைபெறும் விசேஷ பிரார்த்தனையில் கலந்து கொள்கிறர்கள். போலந்தில் கிறிஸ்துவமதம் ஏற்பட்ட 1000 ஆண்டின் நினைவாக இது நடைபெறுகிறது.

## காஷ்மீர்பற்றி இந்தோனேஷியா

ராவல்பிண்டி, மே 11

காஷ்மீர் பிரச்னை அந்தப் பகுதி மக்களுக்கு சுயநிர்ணய உரிமை அளிப்பதின் மூலமே தீர்க்கப்பட வேண்டும் என இந்தோனேஷிய வெளிநாட்டுமந்திரி டாக்டர் ஆதம்மாலிக் கூறியதாக பாகிஸ்தான் ரேடியோ அறிவித்தது.

## வியட்னும்பற்றி உயர் ஆலோசனை

வாஷிங்டன், மே 11

வியட்னுமின் ராணுவ, அரசியல், பொருளாதார நிலைமை பற்றி இங்கு உயர் ஆலோசனைகள் நடைபெற்றுவருகின்றன வியட்னுமிலுள்ள அமெரிக்க தூதர் திரு. ஹென்றி கெபொட் லாட்ஜ் இங்கு ஒருவார விஜயத்தை மேற்கொண்டிருக்கிறர்.

ஜனதிபதி ஜோன்ஸன், திரு. ரஸ்க், திரு. மக்னமாரா, இதர உயர் தலைவர்கள் ஆகியோருடன் லாட்ஜ் பேசவிருக்கிறர்.

## ரஷ்ய, சீன தலைவர்கள்

புக்காரஸ்ட், மே 11

சோவியத் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. பிரஸ்னேவ் ருமேனியா வந்து சேர்ந்திருக்கிறர்.

சோவியத்பிரதமர் கொஸிஜினும், வெளிநாட்டுமந்திரி குரோமிக்கோவும் ஐக்கிய அராபியக் குடியரசுக்கு விஜயம் செய்திருக்கிறர்கள்.

சீனப் பிரதமரின் ருமேனிய விஜயம் ஒத்திவைக்கப்பட்டிருப்பதாய்க் கூறப்படுகிறது.

## மணிலா உதைபந்தாட்டம்

மணிலா, மே 11

நேற்று இங்கு நடைபெற்ற 8-வது ஆசிய யுவர் உதைபந்தாட்டப் போட்டியில் தாய்லந்து தென் கொரியாவை 1-0 கோல்களால் தோற்கடித்தது.

மற்றேர் போட்டியில் பர்மா, மலேஸியாவை 1-0 கோல்களால் தோற்கடித்தது.

## தூதர்கள் சந்திப்பு

புதுடில்லி, மே 11

ஐக்கிய அராபியக் குடியரசு, யூகோஸ்லேவியா ஆகிய நாடுகளின் தூதர்கள் நேற்று வெளிஉறவு அதிகாரி திரு. ஸி. எஸ். ஜாவை சந்தித்து உத்தேச முத்தரப்பு தலைவர்கள் பேச்சு குறித்து ஆலோசனை நடத்தினர்கள்.

## இந்தோனேஷியா

ஜாகர்த்தா, மே 11

மத்திய ஜாவாவிலுள்ள சகல சீனப்பாடசாலைகளும் தேசியமயமாக்கப் பட்டிருக்கின்றன.

இதற்கிடையில் கிழக்கு ஜாவாவில் ஏற்பட்ட எரிமலை வெடிப்பு காரணமாக இதுவரை [illegible] பேர் இறந்திருப்பதாயும், 300 பேரைக் காணவில்லை என்றும் ஒரு செய்தி கூறுகிறது.

## "மீண்டும் போர் மூளுமா என்பதற்கு நிச்சயம் இல்லை"

### இந்தியப் பிரதமர் பேச்சு

புதுடில்லி, மே 11

எல்லையில் தொடர்ந்து அபாயம் இருப்பதால், மீண்டும் போர் மூளுமா மூளாதா என்பதை திட்டவட்டமாகக்கூற முடியாது என இந்தியப் பிரதமர் ஸ்ரீமதி இந்திராகாந்தி குறிப்பிட்டார்.

"எந்த நிலைமைக்கும் இந்தியா முழு ஆயத்தமாய் இருக்கவேண்டும்" என்றும் அவர் கூறினர்.

வெளிநாட்டு மந்திரி சுவர்ண்சிங் பேசியபோது கிழக்கு பாகிஸ்தானில் மீஸோக்களுக்கு பயிற்சியளிக்க மூன்று முகாம்கள் நிறுவப்பட்டிருக்கின்றன என்றும், வளர்ந்துவரும் மீஸோ—நாகா ஒத்துழைப்புப்பற்றி அரசாங்கம் உன்னிப்பாகக் கவனித்துவருவதாயும் குறிப்பிட்டார்.

பாதுகாப்பு மந்திரி திரு. சாவன், பாகிஸ்தான் இராணுவ ஆயத்தங்களை வெகுவாகச் செய்துவருவதாயும், சியால்கோட்டிலும், இதர பகுதிகளிலும் எல்லை நெடுக படைகளைப் பெருக்கிவருவதாயும் கூறினர்.

பாகிஸ்தான் தனது விமானப்படைப் பலத்தைப்பெருக்கிவருகிறதென்றும் சாவன் குறிப்பிட்டார்.

## பிரிட்டிஷ் பிரதமரை கிளே சந்திப்பார்

லண்டன், மே 11

உலக அதிபார சாம்பியன் காஷியஸ் கிளே, மீண்டும் வழக்கம்போன்ற தற்புகழ்ச்சியைக் கைவிட்டு, அடுத்த 10 தினங்களில் தமக்கும் கூப்படுக்குமிடையேயான சண்டையில், கூப்பர் வெற்றிபெறும் சாத்தியம் இருக்கிறது எனக் கூறினர்.

லண்டன் வந்த கிளே, முதலில் நிருபர்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்க மறுத்துவிட்டார். ஆனல் வற்புறுத்திய பின்பு அவர். கூப்பர் வெற்றிபெறக்கூடும் எனக் கூறினர்.

"என்னுடன் கோதாவில் இறங்கத் தைரியம் உடையவர் எவரும் வெற்றிபெற முடியும்" என்றர் கிளே.

முகம்மதலி என்ற பெயருடன் கிளே, "அல்லா என்னுடன் இருக்கிறர். உலகம் என்னுடன் இருக்கிறது மக்கள் என்னுடன் இருக்கிறர்கள். ஒரு சில அரசியல்வாதிகள்தான் எனக்கு விரோதமாக இருக்கிறர்கள்" என்றர்.

மூன்றுண்டுகளுக்கு முன்பு கூப்பரின் இடது குத்தினுல் கீழே விழுந்த அவர், "இப்போது அப்படியெல்லாம் நினைக்காதீர்கள். நான் வேகமாகச் செயல்படுவேன், என்னைக் காத்துக்கொள்ள எனக்குத் தெரியும்" என்றர்.

கறுப்புஉடையும், வெள்ளை ஷர்ட்டும், கறுப்பு கழுத்துப் பட்டியும் அணிந்து நேர்த்தியாகக் காணப்பட்டார் கிளே. 17 மணி நேரப் பிரயாணத்தினுல் களைப்படைந்திருந்த அவர் நித்திரைக்காக நேரடியாகக் ஹோட்டலுக்குச் சென்றர்.

'ரோல்ஸ்ராய்ஸ்' காரில் அவர்நித்திரைக்காகஹோட்டலுக்குச் சென்ற அதே சமயம், கூப்பர் பல பார்வையாளர்களுக்குமுன் பயிற்சியில் ஈடுபட்டிருந்தார்.

கிளேயும், கூப்படும் அடுத்த சில தினங்களில் பிரிட்டிஷ் பிரதமர் வில்சனை காமன்ஸ் சபையில் வைத்துச் சந்திப்பார்கள்.

(பி டி ஸ்)

## ரொடீஷியா பற்றி மீண்டும் பாதுகாப்பு சபை

### 30 ஆபிரிக்க நாடுகள் கோரிக்கை

நியுயோர்க், மே 11

ரொடீஷியாவில் ஸ்மித் ஆட்சிக்கெதிராக எடுக்க வேண்டிய நடவடிக்கை குறித்து, ஆலோசிக்க பாதுகாப்பு சபையை உடன் கூட்டுமாறு 30 ஆபிரிக்க நாடுகள் கேட்டிருக்கின்றன.

பிரிட்டன் கடல், தரை, விமானம் ஆகிய எல்லா வழிகள் மூலமும் பலாத்காரம் உட்பட சகல வழிகளையும் இவ்விஷயத்தில் கைக்கொள்ளவேண்டும்என அந்த நாடுகள் கோரியிருக்கின்றன.

போர்த்துக்கலும் தென்னுபிரிக்காவும் ரொடீஷியாவுக்கு எண்ணெய் சப்ளை செய்தால் அந்தநாடுகளுக்கு எதிராக பொருளாதாரத் தடையை மேற்கொள்ள வேண்டும் என்றும் ஆபிரிக்க நாடுகள் கோரியுள்ளன.

பாதுகாப்பு சபையின் இத்தகைய கூட்டம் லண்டனில் நடைபெற்றுவரும் ரொடீஷியப் பேச்சுக்களைப் பாதிக்கும் என அங்கு கருதப்பட்டது.

நேற்று பிரிட்டிஷ், ரொடீஷிய அதிகாரிகள் இரண்டாவது தடவையாகப் பேச்சு நடத்தினர்கள்.

## ரஷ்யா 7.20 லட்சம் அன்பளிப்பு

மாஸ்கோ, மே 11

இந்தியாவில் வரட்சி பகுதிக்கு உதவி செய்யும் பொருட்டு ரஷ்யா 7 கோடியே 20 லட்சம் ரூபாய்க்கான பொருட்களை அன்பளிப்பு செய்திருக்கிறது.

## 6 கோடிக்கு மேல் கடனுதவி

வாஷிங்டன், மே 11

இந்தியாவின் ரயில்வே அபிவிருத்திக்கு உலகவங்கி 6.80 லட்சம் டாலர் கடனளித்திருக்கிறது.

இதே காரணத்திற்காக அமெரிக்காவிடமிருந்தும் 2-50 டாலர் கடன் கோரப்பட்டுள்ளது.

## பர்மியத் தலைவர்

புதுடில்லி, மே 11

பர்மியத் தலைவர் நீவின் நேற்று மேற்கு பாகிஸ்தானுக்கு விமானம்மூலம் இந்தியா வழியாகச் சென்றபோது டில்லியில் ராஷ்டிரபதி ராதாகிருஷ்ணனுடன் வாழ்த்துக்களைப் பரிமாறிக்கொண்டார்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

பாஞவிடை

## தான்தோன்றி ஈஸ்வரர் ஆலயம்

[புங்குடுதீவு பாஞவிடை தான்தோன்றி ஈஸ்வரர் ஆலய உற்சவத்தை முன்னிட்டு இக்கட்டுரை வெளியாகிறது]

புங்குடுதீவு பாஞவிடையென்னும் பழம்பெரும் பதியில் கோவில்கொண்ட தான்தோன்றி ஈஸ்வரர் ஆலயம் திருமறை கூறும் பஞ்சலிங்கங்களான சுயம்புலிங்கம், காணலிங்கம், வாமனலிங்கம், ஆரிடலிங்கம், மானிடலிங்கம் யென்பனவற்றில் எல்லாம் மகிமையானதாய்-முதன்மையானதாய் போற்றப்படும் ''சுயம்புலிங்கம்'' எனப்படும் தாஞகவே தோன்றிய லிங்க அம்சத்தினைக்கொண்டது இதஞல் இப்பதிலிங்கவழிபாட்டிலும் தனித்துவமுடையதாக விளங்குகிறது.

தான்தோன்றி ஈஸ்வரர் ஆலயத்தின் பூர்வீகம் 400 ஆண்டுகளுக்கு முற்பட்டதாகும். இதன் பழமையான ஆலயம் தற்போதைய தேவஸ்தானத்தின் அருகில் அமைந்துள்ளமலையென்னும் பகுதியில் அமைந்திருந்ததெனவும், வேள்விகளும், விழாக்களும் விசேட காலங்களில்பொது மக்கள் எடுத்து வந்தனர் என்றும், ஒரு நாள் அந்த வேள்வியின்போது அடியார் ஒருவருக்கு தெய்வ அனுபூதி 'கலை' உண்டாகி மேலைக்கெங்கையில் இறங்கி 'கற்றளி' ஒன்றினை எடுத்து வந்த அடியார் தற்போது ஆலயம் அமைந்துள்ள மர்மத் தல விருட்சத்தின்கீழ்வைத்து புகலிடமளித்து, பூஜைகளும் ஆராதனைகளும் செய்து வந்தனர் என்றும், இதுவே தற்போதைய ஆலயத்தின் ஆரம்ப நிகழ்ச்சியென்றும் கூறுகின்றனர்.

400 ஆண்டுகட்குமேல் முதுமை பெற்றும், இளமை மாருது ஆலவட்டம்போன்று தேவஸ்தானத்தின் மூலஸ்தானத்தை நிழற்படுத்தி நிற்கும் இப்புனித விருட்சம் எவராலும் இதுவரை என்னவிருட்சமெனக் கண்டுபிடிக்கமுடியாதது மகிமைக்குரியது.

400 ஆண்டுகளுக்கு முன்னர் கொட்டைகைக் கோவிலாகக் காட்சிகொடுத்த இத்தேவஸ்தானம் உரிமையாளரான ஆறுமுகம் அருணசலம் என்பவரின் காணிகளைக் கடஞக காட்டுக்கந்தகளாலான மடக்கோவிலாக ஸ்தாபிக்கப்பட்டது. இற்றைக்கு 100 ஆண்டுகட்கு முன்னர் ஷெ ஊரினைத் தாயகமாகக் கொண்டு யாழ்ப்பாணத்தை வதிவிடமாக வாழ்ந்த சிவக்கன்று மருதப்ப சுவாமிகள் பெருநிதிக் கிழவராயும் வர்த்தகராயும் விளங்கினகாலை ஒரு நாள் எம்பெருமான் கனவில் தோன்றி புனிதத் தன்மையற்ற புற்றுக்கள் எழும்பிய அழிவு நிலையிலுள்ள ஓர் ஆலயத்தில் இருப்பதாயும் அதனைப் புனருத்தாரணம் செய்து புகழிடமளிக்கும்படியும் கூறி மறைந்தார். தாம் கனவில் கண்ட கருத்தழிந்த கட்டிடம் எங்குண்டு எங்குண்டு எனக் காடும் மலையும் கடற்புறமும் அலைந்த அடிகளார் கடைசியாக இவ்விடம் வந்து கனவினை நிதார்த்தித்துக் கொண்டு ஆலயத்தைப் புதிதாக நிர்மாணித்தார்.

முன்பு பஞ்சாயத்தினரால் பரிபாலிக்கப்பட்ட ஆலயம் அதன் வலிவு குன்றியதால் பொதுமக்கள் மத்தியிலிருந்து வருடாந்தம் தெரிவு செய்யப்படும் அடியார்கள் பிரதிநிதிகளைக் கொண்ட தர்மகர்த்தா சபையினரால் மிகத் திறம்பட நிர்வகிக்கப்பட்டு வருகிறது. அவர்கள் திருப்பணி மேலும் வளரட்டும்.

--ஆ. பேரின்பநாதன்

## "முன்னேற்றத்துக்கு சமய முயற்சி தேவை"

கிளிநொச்சி, புதன்

''பின்தங்கிய கிராமங்கள் தோறும் கிராம முன்னேற்றச் சங்கங்கள் மூலமாக அரசாங்கம் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்துவருவதன் இரகசியம்மக்கள் தமது சுயமுயற்சியாலும் தமது தேவைகளைப் பூர்த்தி செய்யப் பழகிக்கொள்ள வேண்டும் என்பதற்காகவே''

இவ்வாறு கரைச்சிப்பகுதிக் காரியாதிகாரி திரு. எச். இ. பிள்ளைநாயகம் உமையாள்புரம் கிராம முன்னேற்றச் சங்க வருடாந்தக் கூட்டத்தில் பேசும்போது குறிப்பிட்டார். இக்கூட்டம் உமையாள்புரம் அரசினர் பாடசாலையில் நடைபெற்றது.

திரு. பிள்ளைநாயகம் தொடர்ந்து பேசியதாவது:-

பண நெருக்கடியான இந்நேரத்தில் எமது எல்லாத் தேவைகளையும் அரசாங்கமே செய்துதர வேண்டும் என எதிர்பார்ப்பது புத்தியாகாது. நாம் ஒற்றுமைப்பட்டு, முன்னேற்றச் சங்கங்களுக்கு அரசினர் தரும் பணத்தின் உதவியோடு சுயமுயற்சிமூலம் தேவைகளைப் பூர்த்தி செய்யலாம்.''

சங்கத் தலைவர் திரு. ஞா. ஆசீர்வாதம், கிராமாபிவிருத்தி உத்தியோகஸ்தர் திரு. ஜே. ஜே. தேவசகாயம் ஆகியோரும் பேசினர்.

## 500 கட்டிடங்கள் நாசமாகின

டாஷ்கண்ட், மே 11

டாஷ்கண்ட் பூகம்பம் காரணமாக 500 கட்டிடங்கள் நாசமாகியதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கொள்ளை லாபம்

## தண்டனை பெற்றனர்

களுத்துறை, புதன்

கட்டுப்பாட்டு விலையிலும் 10 சதம் கூடுதலாக ஒருருத்தல் இறைச்சி விற்பனை செய்த வெலிப்பனையைச் சேர்ந்த மொகமட் இஸ்மையில் மரிக்காருக்கு களுத்துறை மாஜிஸ்டிரேட் திரு. எம். எஸ். ஏ. ஹசன் மூவாயிசம் ரூபா அபராதம் விதித்துள்ளார்.

○

களுத்துறையைச் சேர்ந்த செல்வராஜ் என்பவர் அரைருத்தல் கொத்தமல்லியை கட்டுப்பாட்டு விலையிலும் இரண்டரைச்சதம் கூடுதலாக விற்பனைசெய்த குற்றத்துக்காக களுத்துறைமாஜிஸ்டிரேட் அவருக்கு ஆயிரம் ரூபா அபராதமும் ஒரு நாள் சிறைத்தண்டனையும் விதித்தார்.

○

மாவு விலையில் கொள்ளை லாபம் பெற்ற குற்றத்துக்காக மட்டுக்கொல்லையைச் சேர்ந்த எம். எஸ். எஸ். பாவா என்பவருக்கு கண்டி அரசாங்க அதிபர் 250 ரூபா அபராதம் விதித்தார்.

○

கம்பளையைச் சேர்ந்த எஸ் சிவலிங்கம் என்பவர் சின்ன வெங்காயத்தில் கொள்ளை லாபம் பெற்ற குற்றத்துக்காக அவருக்கு கண்டி அரசாங்க அதிபர் 75ரூபா அபராதம் விதித்தார்.

## தபால் சேவகர் இல்லை

அக்குறன, புதன்

நுகவெல தபால் நிலையத்தில் ஒருதபால் சேவகர் இல்லாததால் தபால் விநியோகத்தில் கஷ்டம் ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக தபால் தாமதித்தே பொது மக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது.

## கி. ச. வின் கண்டனம்

மினுவாங்கொடை, புதன்

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு மேலதிக சம்பளம் வளங்குவதை கண்டித்து மினுவாங்கொடை கிராம சபை தீர்மானமொன்றை நிறைவேற்றியுள்ளது.

## புதிய முத்திரைகள் இல்லை

திருக்கோணமலை, புதன்

அண்மையில் அரசாங்கத்திஞல் வெளியிடப்பட்ட புதிய முத்திரைகள் திருக்கோணமலை தபால் நிலையத்தில் விற்பனைக்கு இல்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

## காணி உதவியவருக்கு பாராட்டு

வேலணை, புதன்

வேலணை மேற்கு இளைஞர் கழகத்தின் ஆதரவில் புதிய நெசவுநிலையம் ஒன்று நிறுவ நடவடிக்கைகள்மேற்கொள்ளப்படவிருக்கிறது.

இதற்கான அஸ்திபாரக் கல்லை ஊர்காவற்றுறை எம். பி. திரு. வி. நவரத்தினம் நாட்டி வைத்துப் பேசுகையில் மேற்படி நெசவு நிலையத்துக்கென 3 பரப்புக் காணி உதவிய திரு. மு. குமாரசாமிப்பிள்ளைக்குப் பாராட்டுத் தெரிவித்துக் கொண்டார்.

## உதிரிப்பாகங்கள்பற்றி நடவடிக்கை

கொழும்பு, புதன்

கடந்த சில வருடங்களாக இ. போ. ச. பகுதியினர் பல உதிரிப் பாகங்களை விமானமூலம் இறக்குமதி செய்ததைத் தொடர்ந்து பெருந்தொகையான பணத்தை வீஞக விரயம் செய்துள்ளார்கள் என அண்மையில் நடைபெற்ற விசாரணையின்போது தெரியவந்துள்ளது. இதுசம்பந்தமாக உடனடியான நடவடிக்கை எடுக்குமாறு இ போ ச தலைவர் திரு. ஆர். ரி. சில்வா உத்தரவிட்டுள்ளார்.

## இடைத்தேர்தல் அபேட்சகர்கள்

யாழ்ப்பாணம், வியா.

யாழ்ப்பாண மாநகர சபையின் 12-ம் வட்டாரத்தில் சுயேட்சையாக போட்டியிடும் திரு. எம். ஏ. சி. எஸ். ஏ. காதர், கடந்த தேர்தலில் திரு. எம். எம். சுல்தானுடன் போட்டியிட்டவர். தமிழ்க்காங்கிரஸ் அபேட்சகராக போட்டியிடும் திரு. எம். ஏ. நூர்முகம்மது நீண்டகாலமாக தமிழ் காங்கிரஸின் ஆதரவாளராக இருந்தவர். முதல் தடவையாக போட்டியிடுகிருர்.

## காங்கிரஸ் கிளை நிர்வாகிகள்

சுழிபுரம், புதன்

அராலியில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட தமிழ்காங்கிரஸ் வாலிபமுன்னணி புதிய நிர்வாகிகள் பின்வருமாறு:

தலைவர்: திரு. எம். கே. சுப்பிரமணியம், உபதலைவர்கள்: திருவாளர்கள் வி. என். மூர்த்தி, கே. ஆறுமுகம், இணைச்செயலாளர்கள்; திருவாளர்கள் கே. பத்மநாதன், என். சண்முகநாதன், பொருளாளர்: திரு. எம். தங்கவேல்.

## எம். பி. திரும்பினுர்

சுழிபுரம், புதன்

கோலாலம்பூரில் நடைபெற்ற உலகத் தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டில் பங்கு பற்றிய வட்டுக்கோட்டைத் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் திரு. அ. அமிர்தலிங்கம் நேற்று இலங்கை திரும்பினுர்.

REGAL--JAFFNA
NOW SHOWING!
Show of Shows
Tokyo by Night
(Tomoscope - color)
(Aduls Only)

நியூ காலிங்கன்
(இணுவில்)
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறை தினங்களில் 2-30 மணி
சிவாஜி—விஜயகுமாரி
நடித்த
"பச்சை விளக்கு"

ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி2-30,6-30,9-45க்கு
எம்.ஆர். ராதா-எம்.என். ராஜம்
நடித்த
ரத்தக் கண்ணீர்

பி. ஸி. ஸி. சுவேந்திரா
பற்றிய விபரங்களை எதிர்பாருங்கள்
" வெற்றி பெறுவர் தெரிவு "
போட்டி
1966, மே 13, 15-ம் திகதிகளில் வெளியாகும்
'ஈழநாடு' பத்திரிகையில்

கிங்ஸ்லி
(கொழும்பு)
பிளாஸா
(வெள்ளவத்தை)
வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-30.
பேயா நாட்களில் 4 காட்சிகள்.
விஜயா
(மட்டக்களப்பு)
ஸ்ரீகிருஷ்ணு
(திருகோணமலை)



சிவாஜி கணேசன் - சாவித்திரி
(9 மாறுபட்ட வேடங்களில்)
நாகேஷ் —— மஞேரமா
மற்றும் பலர் நடித்திருக்கும்
நவராத்திரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'ஈழநாடு' வெள்ளிக்கிண்ண கரபந்தாட்ட இறுதிப் போட்டி

## 17-ம் திகதி நடைபெறும்

யாழ்ப்பாணம், வியா.

'ஈழநாடு' வெள்ளிக் கிண்ணத்துக்காக தெல்லிப்பழை ஒலிம்பிக் விளையாட்டுக்கழகம் நடத்தும் மூன்றாவது ஆண்டு கரபந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் இம்மாதம் 17-ம் திகதி யூனியன் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

அன்று 'சாம்பியன்' தெரிவுப் போட்டியுடன் ஒரு காட்சிப் போட்டியும் நடைபெறும். பிற்பகல் 3-20-க்கு ஆரம்பமாகும் காட்சிப் போட்டியில், வல்வெட்டித்துறைவிளையாட்டுக்கழகமும் திருக்கோணமலை விளையாட்டுக்கழகமும் மோதிக்கொள்ளும் இப்போட்டியில் கலந்துகொள்ளும் வீரர்கள்வருமாறு:

வல்வெட்டித்துறை கோஷ்டி:கே.தேவசிகாமணி (காப்டன்), ஏ. அமிர்தலிங்கம், என். குகதாஸ், என். தங்கவேல், எஸ். சிவஞானசுந்தரம், வி. அருணாசலம், எஸ். தர்மரத்தினம், ஏ. ரத்தினசிங்கம், வி. அரசரத்தினம், எஸ். தங்கவடிவேலு, எஸ். குகப்பிரகாசம், எஸ். யோகசந்திரன்.

திருக்கோணமலை கோஷ்டி என். சிவஞானசுந்தரம் (காப்டன்), பி.ஏ.தேவமணி கே.கிருபராஜா, தர்மரத்ன வி. தங்கவேலு, வி. ராஜேந்திரன், கே. ஞானம், வி. சண்முகலிங்கம், கே. எஸ். இக்னேஷியஸ்

### சாம்பியன் போட்டி

அன்று மாலை 4-30-க்கு நடைபெறும் 'சாம்பியன்' போட்டியில் கரவெட்டி ஐக்கியவிளையாட்டுக்கழகமும் குப்பிளான் விக்னேஸ்வரா விளையாட்டுக்கழகமும் கலந்துகொள்ளும்.

### கரவெட்டி கோஷ்டி

கரவெட்டி ஐக்கிய விளையாட்டுக்கழக கோஷ்டி வருமாறு: கே அப்புக்குட்டி (காப்டன்) என் அமரசிங்கம், ரி தங்கராஜா, எஸ் ஆனந்தராஜா, எஸ் துரைசிங்கம், கே இந்திரன், கே லோகநாதன்

### குப்பிளான் கோஷ்டி

குப்பிளான் விக்னேஸ்வரா விளையாட்டுக்கழக கோஷ்டி வருமாறு:

கே ஏகாம்பரம் (காப்டன்), எஸ் குணபாலசிங்கம், எம் பத்மநாதன், எஸ் அம்பலவாணர், கே கணேசலிங்கம் கே சுப்பிரமணியம்' வி சுப்பிரமணியம் பி கந்தவனம்

பரிசளிப்பு வைபவம் மாலை 5-15-க்கு நடைபெறும் திருமதி சி பாலசிங்கம் வெற்றிக்கிண்ணங்களைவழங்குவார்

---

## புதுவருட நிர்வாகிகள்

உடுப்பிட்டி, புதன்

உடுப்பிட்டி நாவலர் சனசமூக நிலைய வருடாந்தப் பொதுக்கூட்டமும் உத்தியோகத்தர் தெரிவும் மேற்படி நிலைய மண்டபத்தில் திரு இ வே செல்வரட்ணம் தலைமையில் நடைபெற்றன. நடப்புவருட உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்- மு தம்பு, உபதலைவர் வே விசுவலிங்கம், காரியதரிசி வே சுந்தரம் உபகாரியதரிசிநா. நடேசன், தனாதிகாரி: கா சின்னப்பு, உபதனாதிகாரி திரு இ தவம், கணக்குப் பரிசோதகர் வா சிவப்பர், ஒழுக்க அமைப்பாளர்கள்: சி. கொழுந்து, மு நல்லார், விசேட பிரதிநிதி சி செ குணரட்ணம், நிர்வாகசபை உறுப்பினர்களாக தா குண்டுமணி, ஆ நாகரத்தினம், வே ஐயாத்துரை இ குணம், இ சபாபதி, வே இளையகுட்டி, வீ சரவணே. கா மார்க்கண்டு ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்,

---

## 15,000 பேருக்கு தடுப்புமருந்து

மன்னார், புதன்

மன்னார் பகுதி காலரா தொற்று நோய் பிரதேசமாகப் பிரகடனப்படுத்தப்பட்ட நாள் தொடக்கம் இன்றுவரை 15 ஆயிரம் நபர்களுக்கு தொற்றுநோய் தடுப்பு மருந்து ஏற்றப்பட்டுள்ளதாகவும், வேறு மாவட்டங்களிலும் மக்களுக்கு தடுப்பு ஊசி போடும் வேலை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார்.

---

## தாதிகள் தெரிவுக்கு பரீட்சை

கொழும்பு, புதன்

ஜூலை மாதத்தில் 500 தாதிகளைதிரட்டும் பொருட் சுகாதாரப் பகுதியினர் பரீட்சை ஒன்று நடாத்தவிருக்கின்றனர். அரசினர் ஆஸ்பத்திரிகளில் தாதிகள் பற்றாக்குறைபற்றியும் அதன் காரணமாக நோயாளிகள் படும் கஷ்டம் பற்றியும் அடிக்கடி பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றத்தில் புகார் செய்து வந்தது. குறிப்பிடத்தக்கது.

---

## 'பாடசாலை பஸ் சேவை நடாத்துக'

சுழிபுரம், புதன்

மூளாய், சுழிபுரம், தொல்புரம் கிராமங்களிலுள்ள பெண்பிள்ளைகள் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரிக்கு செல்வதில் தினமும் கஷ்டம் ஏற்பட்டுள்ளதால் அப்பகுதி வழியாக ஒரு பாடசாலை பஸ் சேவையை நடாத்துமாறு சுழிபுரம் கிராமப் பற்றிலுள்ள பெற்றோர்கள் இ. போ. ச. முகாமையாளரைக்கேட்டுள்ளனர்.

---

## தேசிய தொழிலாளர் சங்க கூட்டம்

யாழ்ப்பாணம், வியா.

யாழ். தேசிய தொழிலாளர் சங்கத்தின் (ஐ. தே. கட்சி) ஆண்டுப்பொதுக்கூட்டம் இம்மாதம் 15-ந் திகதி மாலை ஆனைப்பந்தியில் நடைபெறவிருக்கிறது. கொழும்பு ஐக்கிய தேசிய தொழிற் சங்கத்திலிருந்து இரு பிரதிநிதிகள் இக்கூட்டத்தில் பங்குபற்றுவார்கள்.

---

## உற்சவம்

உடுப்பிட்டி, செவ்

புங்குடுதீவு பாணாவிடை தான்தோன்றீஸ்வர தேவஸ்தான வருடாந்த உற்சவங்கள் ஆரம்பமாகி நடைபெற்றுவருகின்றன, 12-ந் திகதி தேர்த்திருவிழாவும் 13-ந் திகதி திருநாவுக்கரசு நாயனாரின் அமரதினத்தையொட்டி 55 வது குருபூசை வைபவமும் தீர்த்த உற்சவமும் நடைபெறவிருக்கின்றன.

---

## மின்சாரத் தடை

களுத்துறை, புதன்

களுத்துறைநகரில் கடந்த மாதத்தில் 19 நாட்களில் 29 தடவைகள் மின்சாரம் தடைப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இங்கு லக்சபானாவிலிருந்து மின்சாரம் விநியோகிக்கப்படுகிறது.

---

## ஈழம் தந்த . . .

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

### சிறப்புநூல்கள்

சுவாமிகள் தம்காலத்தில் தம்சூழலில் வாழ்ந்தோருக்குத் தக்கவாறு நற்பயனளித்ததோடு, பிற்காலத்தும் பிறஇடத்தும் உள்ளோரெல்லாம் பெரும்பயன் எய்தும் பொருட்டாகவும் அரும்பணி பல புரிந்துள்ளார்கள். சிவஞான மாபாடியம் சிவாக்கிரபாடியம் முதலாம் நூல்கள் பல்லாண்டுகளாகப் பலருமறியாவகையில் மறைந்துகிடந்தனவற்றை அச்சேற்றி சைவ உலகோர் உய்யும் வண்ணம் அளித்தார்கள். சிவக்கவிமணியவர்கள் எழுதிய பெரிய புராண விரிவுரை சுவாமிகளது திருக்கரத்தாற் திருத்தப்பட்டுச் சிறப்புப்பெற்றதேயாகும்.

தமக்கென முயலா நோன்றாள் பிறர்க்கென முயலுநர் உண்மையால் உலகம் உளதாயிற்று என்றார் சங்கச் சான்றோர் ஒருவர். அவர் கூற்றிற்கு அரியஉதாரணமாக ஈழம் தந்த இலக்கண முனிவரின் உயரிய வாழ்வு அமைந்துள்ளது. ஈழத்தைச் சார்ந்த வண்ணார்பண்ணையிலே அவதரித்து, தமிழகத்திலுள்ள சூரியனார் கோவிலாதீனத்துச் ஸ்ரீலஸ்ரீ முத்துக்குமார தேசிக சுவாமிகளிடத்தில் சீடராகி ஞானோபதேசம் பெற்று சைவப் பெருமுனிவராய், தில்லையம்பதியில் சிவஞானத்திருத்தளியில் எழுந்தருளியிருந்து, ஞான தானம் புரிந்து, விரோதியாண்டுச் சித்திரைத் திங்களிலே சிவப்பேறெய்திய சுவாமிகள் பெருமை சைவவரலாற்றிலும் தமிழ்வரலாற்றிலும் பொன்னெழுத்திற் பொறிக்கப்படத்தக்கது.

---

## நாட்டிலும் நகரிலும்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

கூடி அந்தப் பிரயாணியை மிரட்டியோ தடல்லாமல் அவருடைய கையில் ஒரு சிறிய காயம் ஏற்படும்படியும் நடந்துகொண்டார்களாம். இது உண்மையா? இதுதானா மரியாதை? தங்களது உண்மையான எஜமானர்கள் பொதுமக்கள்தான் என்பதை இ. போ. ச. சிப்பந்திகள் மறக்கப்படாது. இனி இவ்வித சம்பங்கள் நிகழாதபடி மிகப் பொறுமை காட்ட வேண்டுமென்றே இதை இங்கு குறிப்பிட்டேன்.

பால் கொடுக்கும் பசுவுக்கு பசும் புல்லும் போஷாக்கும் இருந்தால்தான் மேலும் மேலும் நல்ல பாலைத் தரும். அதுபோல இ. போ. ச.வுக்கு நல்ல வருமானம் தேடிக் கொடுக்கும் பொது மக்களுக்கும் ஓரளவாவது சொகுசான பிரயாண வசதிகளைச்செய்து கொடுக்கவேண்டும்.

பஸ் மிதிபலகையில் நின்றுகொண்டு பிரயாணம் செய்பவர்கள் மீது இனிமேல் வழக்குத் தொடரப்பட இருக்கிறது. மிதிபலகைகள் இரண்டுதட்டு பஸ்ஸில் மட்டுமட்டுமல்ல, வேறு பஸ்களிலும் இருக்கின்றன. நேற்று நான் பிரயாணம் செய்த ஒரு சாதாரண பஸ்ஸின் மிதிபலகையில் ஒருவர் நின்றுகொண்டு வந்ததை நான் கண்டேன். இ. போ. ச. சிப்பந்திகள் என்ற காரணத்தினால் ஒருவர் மிதிபலகையில் பிரயாணம் செய்யலாமா?

பெரும்பாலும் கொண்டக்டர்கள், வேலைவிட்டுப் போகும் இ. போ. ச. ஊழியர்கள், பொலிஸ்காரர் முதலியவர்கள்தான் இந்தக் குற்றத்துக்கு ஆளாகிறார்கள். முன்மாதிரி காட்டிக் கொடுக்கவேண்டியவர்களே தவறு செய்தால் பொதுமக்கள் என்ன செய்வது?

சாரதியோ கொண்டக்டரோ பஸ்ஸில் இடமில்லையென்று தடுத்தாலும் அதில் ஏறுபவர்கள் தான் தண்டிக்கப்படுவார்கள் என்று மோட்டார் போக்குவரத்து சட்டம் கூறுகிறது. மிதிபலகைப் பிரயாணிகளுக்கு இந்தசட்டம்போதுமானதா என்பது சிந்தனைக்குரியதோர் விஷயமாகும்.

— வழிப்போக்கன்

---

## தட்டுப்பாடு

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாணத்தில் கிடைக்கும் சின்னவெங்காயம் குறைந்துள்ளதால் தற்போது சின்னவெங்காயத்துக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

---

## காணிக்கச்சேரி

மாத்தறை, புதன்

படித்த வாலிபர்களுக்கு காணி விநியோகம் செய்வதன்பொருட்டு விரைவில் காணிக் கச்சேரி ஒன்று மாத்தறை அரசாங்க அதிபர் காரியாலயத்தில் நடைபெறவிருக்கிறது. 50 வாலிபர்கள் இக்காணிக்கச்சேரியில் தெரிவுசெய்யப்படுவர்.

---

## தேசிய ஒற்றுமை பற்றி எம் பி.

கடுகணுவ, புதன்

'அரசாங்கம் பொது மக்களின் நலன்கருதியே பலநன்மையான விஷயங்களை மேற்கொண்டுள்ளது. தேசிய ஒற்றுமையை விருத்தி செய்யவும் நாட்டின் நலனைக் கருத்தில் கொண்டும் நாம் இலங்கையை பல துறைகளிலும் முன்னேற்றமடையச்செய்ய வேண்டும்' என்று உடுநுவர பாராளுமன்ற உறுப்பினர் திரு.டி.பி.விஜயதுங்கா மின்சார விநியோகத்தை அங்குரார்ப்பணஞ்செய்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

---

## பாகிஸ்தான் வெற்றி

ஹோனூன், மே 11

இங்கு பாகிஸ்தானுக்கும் மேற்கு ஜெர்மனிக்குமிடையே நடைபெற்ற ஹாக்கி போட்டியில் 3-1 கோல்களால் பாகிஸ்தான் வெற்றிபெற்றது.

---


## வரிவிளம்பரம்

### விற்பனைக்கு

காணி

வவனியா நகரசபை எல்லைக்குள் வேப்பங்குளத்தில் (பிரதான வீதி) 5 ஏக்கர் நிலம் விற்பனைக்குண்டு. 30 அடி அகலமுள்ள கிணறு அடங்கிய இக்காணியில், 75 தென்னை மரங்களும், 80 மா மரங்களும் வேறு பிரயோசனங்களும் உண்டு. வீடு கட்டவும், தோட்டம் செய்யவும் உகந்த இடம். எஸ். சந்திரசேகரம், தபாற்கந்தோர், வவனியா. 291

### கல்வி

இலவச உணவு வசதிபெற்றுக் கல்வியும் தொழிற்பயிற்சியும் பெறவிரும்பும் மாணவர்கள் (ஆண்—பெண் இருபாலாரும்) விபரங்களை நிர்வாகி, ஆதாரக்கல்விக் குருகுலம், கிளிநொச்சி என்ற முகவரிக்கு 10 சத முத்திரையுடன் 20-5-66-க்கு முன் எழுதிப் பெற்றுக்கொள்ளவும். விண்ணப்ப முடிவு திகதி 25-5-66. 329

### வைத்தியம்

தொய்வு, கசம், நீரிழிவு, கிரந்தி முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய சுற்றலோக் இனாம். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். வைத்தியர் பரிபூரணானந்தர், கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.


---

# வர்த்தகர்கள் மீது கடுமையான நடவடிக்கை

## மந்திரி எச்சரிக்கை

மட்டக்களப்பு, புதன்

மோசடி செய்யும் வர்த்தகர்களுக்கு எதிராக மேலும் கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன என்று வர்த்தக மந்திரி டாக்டர் எம் வி.பி. பீரிஸ் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் நடைபெறும் கூட்டுறவு சமாஜ மகாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் தான் வர்த்தக மந்திரி டாக்டர் எம்.வி.பி.பீரிஸ் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:— நான் வைத்தியத்துறையில் ஈடுபட்டிருந்தாலும்வாழ்க்கைச்செலவை குறைக்கும் பணியில் உள்ள மந்திரிப்பதவியை ஏற்றுக்கொண்டேன். மோசடி செய்யும் வர்த்தகர்கள்நாட்டிலுள்ள மக்களின் நலனைக் கருதாது தங்கள் நலனைப் பெருக்குவதற்காக முனைந்துள்ளனர். பொதுமக்களின் உதவியுடனும் கூட்டுறவு சமாஜங்களின் உதவியுடனும் இச் சீர்கேடுகளை அற்ற முயன்றுள்ளேன் என்றும் கூறினார்.

கல்குடா எம்பியும் மட்டக்களப்பு கூட்டுறவுச் சமாஜத் தலைவருமான திரு. கே. டபிள்யு. தேவநாயகம் மந்திரியை வரவேற்றுப் பேசுகையில்; வர்த்தக மந்திரி கூட்டுறவு இயக்கங்களில் நிலவும் ஊழல்களையும் மோசடிகளையும் களைந்தெறிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

---

## ஐயாறன்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு வாரப்பத்திரிகையாக 'ஈழநாடு' ஆரம்பிக்கப்பட்டது. அவரது புனித உருவப்படம் 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒரு இரட்சை போல் இருந்து இப்பத்திரிகையைப் பாதுகாத்து வளர்த்து வருகிறதென்று தான் நம்புகிறேன்.

எந்த லட்சியத்துக்காக அப்பெரியார் வாழ்ந்து தொண்டாற்றினாரோ அதே நோக்கங்களுக்கு 'ஈழநாடு' தொடர்ந்து தொண்டாற்ற அப்பெரியார் அருள்புரிய வேண்டும். அருள்புரிவாரென்று, அவரது குருபூசை தினமாகிய இன்று நம்பிக்கையுடன் பிரார்த்திக்கின்றோம்.

ஃ ஃ ஃ

பொன்னொத்த மேனிமேல்
வெண்ணீறணிந்து புரிசடைகள், மின்னொத்திலங்கப் பலிதேர்ந்துழலும் விடங்கவேடச், சின்னத்தினால் மலிதில்லையுட் சிற்றம் பலத்து நட்டம். என் அத்தன் ஆடல் கண்டின்புற்ற தாலிவ் விருநிலமே.

— அப்பர் சுவாமிகள்

---

## அரசாங்க எம்.பீக்கள் கூட்டம்

கொழும்பு, புதன்

அரசாங்க பாராளுமன்றக் குழு இம்மாதம் 13-ந் திகதி அலரிமாளிகையில் கூடி பல விஷயங்களை ஆராயவிருக்கிறது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# நல்லூர் கிராமசபை:
## சிங்கள எம். பி. கேள்வி

கொழும்பு, புதன்
மே 23-ந் திகதி பாராளுமன்றம் கூடும்பொழுது திரு. டி. பி. ஆட்டிக்கலே உள்ளூராட்சி அமைச்சரின்பாராளுமன்றக்காரியதரிசியிடமிருந்து பின்வரும் கேள்விகளைக் கேட்பார்.

கிராமச்சபைக் கட்டளைச் சட்டத்தின் 48 (2) ஆம் பிரிவின் நியதிகளிற்கமைய நல்லூர் கிராமச் சபையின் 1963, செப்டம்பர் 30 ஆம் தேதி, 1964 செப்டம்பர் 30 ஆம் தேதி ஆகிய தேதிகள் முடியவுள்ளனவும் இற்றைவரையுள்ளனவுமான மூன்று வருடக் கணக்குகள் பரிசோதனை செய்யப்படவில்லையென்பதையும்;

சம்பந்தப்பட்ட பண உறுதிச் சீட்டுக்களில் குறிப்பிட்டுள்ளவாறு தெருவிளக்குகள் அமைக்கப்படாதிருக்கவும் கிராமச்சபையின் பல வட்டாரங்களில் தெரு விளக்குகள் அநேகம் அமைத்தமைக்கென தலைவரினாலும் அவரது பணியாளராலும் கொடுப்பனவுகள் செய்யப்பட்டுள்ளன வென்பதையும் அவர் அறிவாரா?

தலைவர், உபதலைவர் ஆகியோருக்கெதிராக மேற்கொள்ள உத்தேசிக்கப்படும் நடவடிக்கை யாது? ஆமெனில், எப்பொழுது மேற்கொள்ளப்படும்?

கிராமச் சபைக் கட்டளைச் சட்டத்தின் 49 (1) ஆம் பிரிவின் நியதிகளிற்கமைய நல்லூர் கிராமச் சபையின் அரசிறை கச்சேரியிலுள்ள சமுதாய நிதியில் கிரமமாக வரவு வைக்கப்படவில்லை, வைக்கப்படுவதுமில்லையென்பதையும், இதன் விளைவாக கடந்த காலத்தில் பல்லாயிரக்கணக்கான ரூபாக்கள் தலைவரினால்கையாளப்பட்டதென்பதையும்;

இதுபோன்ற செயல்கள் மீண்டும் நடைபெரு வண்ணம் தடுக்குமுகமாக இது வரை நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளப்படவில்லையென்பதையும் அவர் அறிவாரா?

இது சம்பந்தமாக அவர் மேற்கொள்ள உத்தேசிக்கும் நடவடிக்கையாது? அந் நடவடிக்கை எப்பொழுது மேற்கொள்ளப்படும்?

## சங்கிலி அறுத்ததாக குற்றச்சாட்டு

மாவிட்டபுரம், புதன்
மயிலிட்டியைச் சேர்ந்த திருமதி பூரணம் சின்னமணி என்பவரின் 500-00 ரூபாய் பெறுமதியான தங்கச் சங்கிலியை அவரின் சகோதரியானதிருமதி தங்கரத்தினம் கணபதிப்பிள்ளை அறுத்ததாக காங்கேசன்துறைப் பொலிஸில் செய்யப்பட்ட புகாரைத் தொடர்ந்து பொலிஸார் திருமதி தங்கரத்தினம் கணபதிப்பிள்ளையைக் கைதுசெய்து மல்லாகம் பதில் நீதிபதி திரு. ஜி. வி. பாலசிங்கம் முன்னிலையில்ஆஜர்செய்தார்கள். நீதிபதி சந்தேகநபரை 750 ரூபாய் பிணையில் செல்ல உத்தரவிட்டு மேல்விசாரணையை இம்மாதம் 19-ம் திகதிக்கு ஒத்திவைத்துள்ளார்.

## அங்கத்தவரின் துணிச்சல்

கொழும்பு, புதன்
வெசாக் தினத்தின்பின் தெஹிவல-கல்கிசை மாநகர சபையின் ஒரு வட்டாரத்தில் உள்ள வீடொன்றின் முன் கும்பலாகக் குப்பை முதலியன குவிக்கப்பட்டிருந்தது. இதனைக் கண்டு அருவருப்படைந்த அவ்வீட்டுப் பெண்மணி மாநகர சபை அதிகாரிகளுக்கு அதனை அகற்றும்படி அறிவித்திருந்தார். ஆனல் இது பலனளிக்கவில்லை. ஆனல் சில நாட்கள் சென்ற பின்னர்கூட குப்பை அகற்றப்படாததைக் கண்ட அவர் தமது வட்டார அங்கத்தவர் திரு. பிறுங் பெரேராவின் உதவியை நாடினர்.

வட்டார அங்கத்தவர் உடனடியாக இரண்டு வாடகை லொறிகளைக் கொண்டுவந்து குப்பையை ஏற்றுவித்து சுகாதார வைத்திய பரிசோகரின் கந்தோர் வளவுக்குள் கொட்டுவித்தார். இக்குப்பையை இனிமேல் சுகாதார வைத்திய பரிசோதகர்கள்தான் அப்புறப்படுத்த வேண்டும்.

## வாஞெலியில் அப்பர் குருபூசை

மாவிட்டபுரம், வியா.
அப்பர் குருபூஜைத்தினத்தைமுன்னிட்டு திரு. ஷண்முககுமரேசன் இலங்கை வாஞெலியில் "அப்பர்பெருமானின் வாழ்க்கை காட்டும் உண்மைகள்" என்னும்விடயம்பற்றி இன்று வியாழக்கிழமை இரவு 7-00 மணிக்கு ஒரு பேச்சை நிகழ்த்துவார்.

## இந்தன்பிள்ளையார் உற்சவம்

யாழ்ப்பாணம், வியா
புளியங்கூடல் இந்தன் பிள்ளையார்ஆலய உற்சவம் நேற்று ஆரம்பமாகியது. 9ம் நாள் தேர்த்திருவிழாவும், 10ம் நாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். உற்சவ காலங்களில் தினமும் கூட்டுப்பிரார்த்தனைகளும், சமயப்பிரசங்கங்களும் நடைபெற ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன

போன்: 7168

C. W. E.
புடவைகள்
பல வர்ணங்களில்
பிளேன் ஜப்பான் ரெறிக்கொட்டன் சாறீஸ்
லேடி கமில்டன் கிறேப் சாறீஸ்
கிப்பலோண், பெப்ரிக், வெ. பொப்ளின், கலர் பொப்ளின்,
நேவி புளூ, காக்கி சூட்டிங்,
901 ஜப்பான் மல் வேட்டிகளும்
கூப்பனுக்கு பெற்றுக்கொள்ளலாம்.
"ராஜ்கோபால்ஸ்"
36/1, பெரியகடை, யாழ்ப்பாணம்.

இப் பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1966-ம் ஆண்டு மே மாதம் 12ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## புதியநிர்வாகிகள்

யாழ்ப்பாணம், புதன்
சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் சங்கத்தின்யாழ். கிளை கூட்டம் யாழ். அரசாங்க அதிபர் செயலகத்தில் நடைபெற்றது.

பின்வருவோர் நடப்பு வருட உத்தியோகத்தர்களாக தெரிவுசெய்யப்பட்டனர். தலைவர்: திரு. வி. எம். அபயசேகர, உபதலைவர்கள்: டாக்டர் வி.ரி பசுபதி, கேணல் ஈ. ஏ.இராசசிங்கம், முகாந்திரம் இ. பி. இராசையா, திருவாளர்கள் எம். எம். அப்துல்காதர், ஜே எம்.சபாரத்தினம், பொதுக் காரியதரிசி: திரு. ஆர். ஈ. இராசநாயகம், பொருளாளர் திரு.ஏ சுப்பிரமணியம், கணக்காளர் திரு. ஹட்சன் செல்வராஜா. எட்டுப்பேர் கொண்ட நிர்வாகசபைஅங்கத்தவர்களும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

## கூட்டு முயற்சி

கொழும்பு, புதன்
இரு நாடுகளுக்கும் பொதுவான விஷயங்களை ஆராயும் பொருட்டு இலங்கையும் இந்தியாவும் சேர்ந்து கூட்டாக ஒரு தேயிலைக் கமிஷன் நிறுவியுள்ளது.

## உலக பௌத்த மகாநாடு முடிவு

கொழும்பு, புதன்
இலங்கையில்நடைபெற்ற உலக பௌத்த பிக்குகளின் மகாநாடு இன்று முடிவடைந்தது. இளைஞர் பௌத்த சங்கத்தில் இறுதிக்கூட்டம் நடைபெற்றது. நாளை அநுராதபுரம், குருநாக்கல் ஆகிய இடங்களுக்கு மகாநாட்டுப் பிரதிகள் விஜயம் செய்கிறுர்கள்.

## வீதியின் நிலை

சுழிபுரம், புதன்
சுழிபுரம் காளுவன்சந்தி விஸ்தரிக்கப்பட்ட பின்னர் அதன் அருகே மக்கியும் கற்களும் கொட்டப்பட்டிருப்பதன் காரணமாக அவ்வழியால் செல்லும் மோட்டார் வாகனங்கள் சுலபமான முறையில் செல்ல முடியாதிருக்கின்றது. இதுசம்பந்தமாக பொதுமராமத்து இலாகாவிற்கு அறிவிக்கப்பட்டும் ஒருவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லையாம்.

ஊழியர் பற்ருக்குறை
## வேலையில் தாமதம்

யாழ்ப்பாணம், வியா
யாழ்ப்பாண மோட்டார் போக்குவரத்து காரியாலயத்தில் உத்தியோகத்தர்கள் பற்ருக்குறையினல் சாரதி லைசென்ஸ் விண்ணப்பங்கள் பலமாதங்களாக நடவடிக்கைகள் எடுக்கப்படாத நிலையில் இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நாளொன்றிற்கு எட்டு அல்லது பத்துப் பேர்களே சராசரியாக சாரதி லைசென்ஸ் அனுமதி பத்திரத்திற்காக பரிசோதனை செய்யப்பட்டு வருகின்றனர்.

யாழ் அரசாங்க அதிபரின் மேற்பார்வையில் இயங்கும் இத்திணைக்களத்தில் உத்தியோகபூர்வமான வேலைகளை கவனிப்பதற்காக ஒருவரே இருக்கின்றூர்.

# சாராயம் விற்ற வழக்கில் பலருக்கு அபராதம்

மாவிட்டபுரம், புதன்
தெல்லிப்பழையைச் சேர்ந்த கதிராமி சின்னப்பு என்பவர் சட்டவிரோதமாகச் சாராயம் விற்றதாகக் காங்கேசன்துறை கலால் இலாகா இன்ஸ்பெக்டர் திரு எஸ் என் நடராசாவால் குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் எதிரி குற்றத்தை ஒப்புக்கொள்ளவே மல்லாகம் பதில் நீதிபதி ஜி வி பாலசிங்கம் எதிரிக்கு 125 ரூபாய் அபராதம் விதித்தார்.

வசாவிளானைச் சேர்ந்த தருமலிங்கம் ஆச்சிமுத்து என்னும் பெண்மணி சாராயம் விற்றதாகக் குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் நீதிபதி 125 ரூபாய் அபராதம் விதித்தார்

காங்கேசன்துறை ஊறணியைச் சேர்ந்த பொன்னம்பலம் இராசையா என்பவர் சாராயம் விற்றதாகக் குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் நீதிபதி எதிரிக்கு 100 ரூபாய் அபராதம் விதித்தார்.

சுன்னுகத்தைச் சேர்ந்த சின்னன் மாணிக்கம் என்னும் பெண்மணி சட்டவிரோதமாக 36 ரும் வடி சாராயம் விற்றதாக காங்கேசன்துறைகலால் இலாகாவில் குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் நீதிபதி எதிரிக்கு 100ரூபாய் அபராதம் விதித்தார்

காங்கேசன்துறையைச் சேர்ந்த செல்வன் சின்னையா என்பவர் சட்டவிரோதமாக சாராயம் விற்றதாகக் குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் நீதிபதி எதிரிக்கு 100 ரூபாய் அபராதம் விதித்தார்.

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

# மலேஸிய தமிழர்களின் மொழி ஆர்வம்
## வட்டுக்கோட்டை எம். பி. பாராட்டு

யாழ்ப்பாணம், புதன்
மலேயா மக்களின் தமிழார்வமும் அவர்களின்இதர முன்மாதிரிகளும் உண்மையிலேயே தமிழை வளர்க்க அவர்கள் அரும்பாடுபடுகிருர்கள் என்பதைக் காட்டுவதாய் இருந்ததுஎன்பதைத் தாம் நேரில் கண்டதாக மலேசியா சென்று திரும்பிய வட்டுக்கோட்டை எம். பி- திரு. அமிர்தலிங்கம் குறிப்பிட்டார் இலங்கைமக்களும் மலேஸிய தமிழர்களின் இந்த முன்மாதிரியைப் பின்பற்றினல் தமிழின் வளர்ச்சியைஎவரும் தடைசெய்ய முடியாது என்றும் அவர் கூறினர்.

மலேயாவும், சிங்கப்பூரும் கடந்த 5 ஆண்டுகளில்அடைந்துள்ள பொருளாதார முன்னேற்றம், 18 வருட சுதந்திர இலங்கையின் முன்னேற்றத்தை விட மிகவும் அதிகம் என்றும் அவர் கூறினர்.

கோலாலம்பூர் தமிழாராய்ச்சிமகாநாடு தமிழரின் வருங்கால வளர்ச்சிக்கு ஒரு ஊன்றுகோல் என்றும், இம் மகாநாட்டை நடத்திய அறிஞர்களுக்கு நன்றி தெரிவிக்கவேண்டுமென்றும் அவர் கூறினர்.

(ந. நி)

## கெய்ரோவில் ரஷ்ய பிரதமர்

கெய்ரோ, மே. 11
சோவியத் பிரதமமந்திரி திரு. கொஸிஜின் இப்பொழுது கெய்ரோவில் இருக்கின்றூர். அவர் ஜனதிபதி நாஸரைச் சந்தித்து பேச்சுவார்த்தைகள் நடத்தினர். திரு. கோஸிஜின் சோவியத் தலைமைப்பீடத்துக்கு வந்த பின்னர் கெய்ரோவுக்கு விஜயஞ்செய்வது இதுவே முதல்தடவை.

இதற்கிடையில் சீனப்பிரதமர் திரு. சூ-என்லாயும் அடுத்த மாதத்தில் கெய்ரோவுக்கு விஜயஞ்செய்யக்கூடுமென்று செய்திகள் கிடைத்துள்ளன. திரு. கொஸிஜின் விஜயத்தைத் தொடர்ந்து திரு. சூ-என்லாயின் விஜயம் இடம்பெற இருப்பதால் அது முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்குமென்று கருதப்படுகிறது.

## மாலைதீவில் இந்திய தூதர்

புதுடில்லி, மே 11
இலங்கையில் இந்திய ஸ்தானிகராக இருக்கும் டாக்டர் பீம்சென் சச்சார் மாலைதீவில் முதலாவது இந்தியத் தூதராகவும் நியமிக்கப்பட்டுள்ளார். டாக்டர் சச்சார் இன்று தமது நியமனப் பத்திரங்களை மாலைதீவு சுல்தானிடம் சமர்ப்பித்தார்.

## மொழி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
திகளுக்கு சட்ட உருவம் கொடுப்பதற்கான நடவடிக்கைகள் விரைவில் எடுக்கப்படுமென்றும் உள்துறை அமைச்சர் திரு. குல்சாரிலால் நந்தா பார்லிமெண்ட் உறுப்பாளர் திரு. இரா. செழியனுக்கு எழுதியுள்ள கடிதம் ஒன்றில் உறுதியளித்திருக்கின்றூர். சிறுபான்மை மக்களின் மொழிகள்பற்றிய அரசாங்கத்தின் கொள்கைகளுக்குச் சட்டரூபம் கொடுக்கும்படி கோரி திரு செழியன் எழுதியிருந்த கடிதமொன்றுக்குப் பதிலளிக்குமுகமாகவே திரு. நந்தா மேற்படி பதிலை அனுப்பியுள்ளார்.

## தீ விபத்தில் எண்மர் பலி

விஜயவாடா, மே 11
இங்கு ஏற்பட்ட ஒரு தீ விபத்தில் 7 பெண்களும், ஒரு குழந்தையும் மாண்டனர். நூற்றுக்கணக்கான குடிசைகள் நாசமாயின.

# சைக்கிளின் கால்நூற்ருண்டு சரித்திரம்

யாழ்ப்பாணம், புதன்
23 ஆண்டுகளுக்குமுன் காணமற்போன ஒரு சைக்கிள் இப்போது உரியவரைத் தேடி யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டிருக்கிறது. ஆனல் உரியவர் எவரும் இன்னும் அதைக்கோரவில்லை.

யாழ்ப்பாணம், 2-ம் குறுக்குத் தெருவைச் சேர்ந்த எஸ். குலசிங்கம் என்பவருக்குச் சொந்தமான இந்த சைக்கிள் 1943-ம் ஆண்டு, மெயின் வீதியில் வைத்து காணமற்போயிற்று. ஆனல் இப்போது அது கம்பஹாவில் கண்டுபிடிக்கப்பட்டது. சைக்கிள் கிடைத்துவிட்டாலும், சொந்தக்காரர் இப்போது எங்கிருக்கிருர் என்பது தெரியவில்லை.

ந. நி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org